**சபரகமுவ மாகாண ஆரம்பக்கல்விப் பிரிவு**

# சிசு சவிய 2024

## தரம் - 5

**மாணவர்களை பாடசாலைகளுக்கு தேர்ந்தெடுப்பதற்காகவும் உதவிப்பணம் வழங்குவதற்குமாக தரம் 5 மாணவர்களுக்காக நடாத்தப்படும் புலமைப்பரிசில் பரீட்சைக்காக மாணவர்களைத் தயார்படுத்தவதற்காக நடாத்தப்படும் முன்னோடிப் பரீட்சை**

**மதிப்பீட்டுப் பரீட்சை இலக்கம் - 1**

**வினாத்தாள் - 11**

**01 மணி 15 நிமிடங்கள்**

**இந்த வினாத்தாள் பரீட்சையல்ல என்பதோடு மாணவர்களின் அடைவு மட்டத்தினை அளவிடுவதற்காக மாத்திரம்**

**சுட்டெண் : -**

### பரீட்சார்த்திகளுக்கான ஆலோசனைகள்

- பரீட்சை சுட்டெண்ணை குறித்த இடத்தில் எழுதவும்.
- மூன்றாவது பக்கத்திலும் குறித்த இடத்தில் பரீட்சை சுட்டெண்ணை எழுதவும்.
- வினாத்தாளில் 60 வினாக்கள் இருக்கின்றன. சில வினாக்களில் உப வினாக்களும் காணப்படுகின்றன.
- எல்லா வினாக்களுக்கும் வினாத்தாளிலேயே விடையளிக்கவும்.
- செய்கை வேலைக்காக தாள் வழங்கப்படும்.

### விடைத்தாள் பரீட்சகர்களின் பாவனைக்கு மாத்திரம்

| பக்க இலக்கம் | பெற்றப் புள்ளிகள் |
|---|---|
| 2 | |
| 3 | |
| 4 | |
| 5 | |
| 6 | |
| 7 | |
| 8 | |
| | |
| மொத்தப் புள்ளி இலக்கத்தில் | |
| மொத்தப் புள்ளி எழுத்தில் | |

| | கையெழுத்து, குறியீட்டு இலக்கம் |
|---|---|
| **முதலாவது பரீட்சகர்** புள்ளி வழங்கும் திட்டத்தின் அடிப்படையில் மதிப்பீடு செய்யப்பட்டது என்பதை உறுதிப்படுத்துகின்றேன். | V/II/S |
| **இரண்டாவது பரீட்சகர்** முதலாவது பரீட்சகரின் மதிப்பீடு சரியென உறுதிப்படுத்தகின்றேன். | V/II/S |
| **மதிப்பீட்டுப் புள்ளியை உறுதிப்படுத்தும் பரீட்சகர்** மதிப்பீடு செய்து வழங்கிய புள்ளிகள், இறுதிப்புள்ளிகள் சரியென உறுதிப்படுத்துகின்றேன். | V/II/S/EMF |
| **பிரதான பரீட்சகர்** மேற்பார்வை செய்யப்பட்டது. இறுதிப்புள்ளி சரியானது. | V/II/S/CH |

**வழங்கப்படும் திகதி - 2024.02.20 மு.ப 11.00 – பி.ப**

( 2ஆம் பக்கம் பார்க்கவும் )

01. **பின்வரும் பந்தியை வாசித்து கீழே கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.**

இன்று ஒரு மிருகத்தைக் கூட வேட்டையாட முடியவில்லையே யார் முகத்தில் விழித்தேன் என அரசர் யோசித்தார். உடனே காலையில் முதல் முதலாக பார்த்த முல்லாவின் முகம் நினைவுக்கு வந்தது. அரசர் காவலரை அழைத்தார். முல்லாவைத் தேடிப்பிடிக்க கட்டளையிட்டார். காவலாளிகள் முல்லாவைக் கண்டுபிடித்தனர். அரசர் முன்னிறுத்தினர். முல்லாவைக் கண்ட அரசர் கோபம் கொண்டார். முல்லாவைப் பாரத்து அறிவு கெட்டவனே காலை உன் முகத்திலேயே விழித்தேன். ஒரு மிருகத்தைக்கூட வேட்டையாட முடியவில்லை.

1. அரவு, சங்கிலிக்கொம்பு இடம்பெற்ற சொல்லை எழுதுக ..........................................
2. ''சாந்தம்'' என்பதன் எதிர்க்கருத்துச் சொல்லை எழுதுக. ..............................................
3. ''ஒரு செயலைச் செய்வதற்கு பணித்தல்'' என்பதைக் குறிக்க பயன்படுத்தப்பட்ட சொல் எது? ..........................................................
4. ''வதனத்திலேயே'' என்பதைக் குறிக்க பயன்படுத்தும் சொல் எது ? .......................
5. ''துயிலெழுதல்'' என்பதனைக் குறிக்கும் இன்னொரு சொல் எது? ............................
6. இங்கு குறிப்பிடப்படும் படர்க்கைச் சொல் ஒன்று எழுதுக. ........................................

02. **பின்வரும் ஒவ்வொரு வாக்கியத்திலும் எழுவாய் பயனிலைத் தொடர்பு சரியாயின் (✓) எனவும், பிழையாயின் (✗) எனவும் அடையாளமிடுக.**

1. நான் மெதுவாக நடந்தாள். (........)
2. மரங்கள் முறிந்து விழுந்தது. (........)
3. மாமி பலகாரம் செய்தாள். (........)
4. ராகவி இனிமையாகப் பாடுவாள். (........)
5. நண்பர்கள் இருவரும் படித்தார்கள். (........)

03. **இறந்தகால பன்மைச் சொல்லின் கீழ்க் கீறிடுக.**

1. சென்றோம் 2. சென்றாள் 3. சென்றேன்

04. **பின்வரும் சொற்களில் சரியான சொல்லின் கீழக் கோடிடுக.**

1. (1) ஆராய்சி (2) ஆராய்ச்சி (3) ஆறாய்ச்சி
2. (1) சுற்றுச்சூழள் (2) சுட்றுச்சூழல் (3) சுற்றுச்சூழல்
3. (1) வெண்மேகம் (2) வென்மேகம் (3) வெந்மேகம்

05. 1. **பின்வரும் பழமொழியின் கருத்தை எழுதுக.**

கந்தையானாலும் கசக்கிக்கட்டு.

..........................................................................................................................................

2. **பின்வரும் பழமொழியின் இடைவெளியை நிரப்புக.**

............................................ கறிக்கு உதவாது.

06. **பின்வரும் இறந்தகால வசனத்தை எதிர்கால பன்மை வசனமாக மாற்றி எழுதுக.**

பறவை கூடு நோக்கித் திரும்பியது.

..........................................................................................................................................

07. **பின்வரும் சொற்களுக்கு ஒத்தக்கருத்துத் தரும் சொற்களை எழுதுக.**

1. பத்திரிகை - ......................................... 2. நூல் - .............................................

08. **பின்வரும் மரபுத்தொடரின் கருத்தை எழுதுக.**

1. நட்டாற்றில் விடல் - ................................................................................................

09. **பொருத்தமான நிறுத்தக் குறிகளை இடுக.**

1. பாமினி தமிழ் கணிதம் சமயம் ஆகிய பாடங்களில் சிறப்பு சித்திப்பெற்றாள்

2. இந்த திண்மத்தின் பெயர் என்ன

10. **கீழே உள்ள சொற்களை ஒழுங்குப்படுத்தி கருத்துள்ள வாக்கியமாக எழுதுக.**

வீதி / நிறைந்து / மழை/ காரணமாக / இருந்தன / பெய்வதன் /

எங்கும்/வெள்ளம்/கடும்

..........................................................................................................................................

11. **பின்வரும் கடிதத்தின் இடைவெளிகளை நிரப்புக.**

இடம்
திகதி

1. ............................................

உடல்


முடிப்பு

2. ............................................

12. **பின்வரும் ஒவ்வொரு படத்திற்கும் பொருத்தமான ஆங்கிலச் சொல்லை ஆங்கில எழுத்துக்களில் எழுதுக.**

1. 

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | | | |

2. 

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| | | | | | | |

13. **பின்வரும் சொற்களை சரியாக ஒழுங்குப்படுத்தி கருத்துள்ள வாக்கியங்களாக எழுதுக.**

1. help / to / vegetables / cut / I / you

...................................................................................................

2. has / nose / My / small / a / dog

...................................................................................................

14. **பின்வரும் ஆங்கிலச் சொல்லுக்குரிய கருத்தை தமிழில் எழுதுக.**

1. clean - ..................................     2. mountain - ..................................


15. **"திறவுங்கள்" எனும் சொல்லின் கருத்தை சிங்களத்தில் எழுதுக.**

..............................................................................................

16. **பின்வரும் வாக்கியம் சிங்களத்தில் கூறும் முறையினை தமிழில் எழுதுக.**

உங்களுக்கு தண்ணீர் வேண்டுமா? - ....................................................................

**17. 1. எண்சட்டத்தில் தரப்பட்டுள்ள எண்ணை எழுதுக.**




.........................................................................................

2. பின்வரும் எண்ணை இடப்பெறுமானத்திற்கு ஏற்ப விரித்தெழுதுக.

9364 - ....... + .......... + ......... + ............

18. தரப்பட்ட எண்கோலங்களில் அடுத்துவரும் எண்ணை எழுதுக.

58 , 63 , 68 , 73 , .............. , ..............

19. தொழிற்சாலையொன்றில் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பானப் போத்தல்களின் எண்ணிக்கை தொடர்பான விபரம்.

| மாதம் | தோடம்பழுப் பானம் | மாம்பழுப் பானம் |
|---|---|---|
| ஜனவரி | 1567 | 1335 |
| பெப்ரவரி | 1071 | 1452 |


1 ஜனவரி மாதத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பழப்பான போத்தல்களின் எண்ணிக்கை யாது?....................................

2. தோடம்பழப் பானத்தின் உற்பத்தி ஜனவரி, பெப்ரவரி மாதத்திற்கு இடையில் காணப்படும் வித்தியாசம் யாது ? ...............................................................................................

**20.** 428 புத்தகங்களை ஒரேயளவான 4 பெட்டிகளில் சமனாக அடுக்கினால் ஒரு பெட்டியில் இருக்கும் புத்தகங்களின் எண்ணிக்கை யாது ? ..................................

21. கொள்கலன் ஒன்றில் 50l தேங்காயெண்ணெய் இருந்தது. ஒரு வாரத்தில் பின் விற்கப்பட்ட தேங்காயெண்ணெய் அளவு மிகுதி *7l 250ml* ஆகும். ஒரு வாரத்தில் விற்கப்பட்ட தேங்காயெண்ணெய் அளவு யாது ? ....................

22. 1. உருவத்தின் ¼ பங்கை நிழற்றுக.




2. 32 மாங்காய்களின் ½ பங்கு எத்தனை?

.....................................................

23. பின்வரும் உரோம எண்ணின் முன், பின் வரும் இலக்கத்தை எழுதுக.


.............. viii ..............

24. 1. இவ்வுருவத்தில் 2 சமச்சீர் அச்சுகளை வரைக.




2. பின்வரும் திண்ம உருவங்களின் பெயர்களை எழுதுக.

(1)



(2)




............................ ...................................

25. பின்வரும் விலைப்பட்டியலை பூரணப்படுத்துக.

| பொருள் | வாங்கிய அளவு | 1kg விலை ரூபா சதம் | பெறுமதி ரூபா சதம் |
|---|---|---|---|
| பருப்பு | ---------- | 340 00 | 170 00 |
| கௌப்பி | 250g | 840 00 | ---------- |
| தேயிலை | 200g | ---------- | 200 00 |
| மொத்தம் | | | ---------- |

2. மேலுள்ள பொருட்களை வாங்கிக் கொண்டு ரூபாய் 1000/= கொடுத்தால் கிடைக்கும் மீதிப் பணம் எவ்வளவு ? ......................

26. ஒரு மாணவர் குழு விரும்பிய பழங்கள் பற்றிய விபரம் கீழே வரைபில் தரப்பட்டுள்ளது.





1.பப்பாசியை விட அப்பிளை விரும்பும் மாணவர்களின் எண்ணிக்கை யாது?

..............................................


2. குழுவில் காணப்படும் மொத்த மாணவர்களின் எண்ணிக்கை யாது?

.......................................................

27. 1. பின்வரும் பென்சிலின் நீளம் யாது? ......................சென்றிமீற்றர்




2. பின்வரும் படிக்கற்களை மட்டும் பயன்படுத்தி நிறையை அளக்கக்கூடிய முறையொன்றினை எழுதுக.



10 g 20g 50g 100g 5kg

5kg 170g -.................................................................................................................

28. பின்வரும் எண்களை இறங்குவரிசையில் எழுதுக.

6708 , 8706 , 8076 , 6807 - ...........................................................................................

* **வினா இல 29 – 58 வரையான வினாக்களுக்கு சரியான விடையை தெரிவு செய்க.**


29. இலங்கை தேசிய கொடியில் மஞ்சல் நிற சிங்கம் குறித்து நிற்பது,
    1. தேசிய ஒருமைப்பாடு
    2. சிங்கள மக்களை பிரதிநிதித்துவப்படுத்தல
    3. வீரத்தை குறித்து நிற்றல

30. இலங்கையில் பண்டைய காலத்தில் பயணித்த , தற்காலத்திலும் பயணிக்கும் புகையிரதத்திற்கு பயன்படுத்தப்படும் எரிபொருள் முறையே,
    1.நிலக்கரி, டீசல் 2. டீசல், பெற்றோல் 3. டீசல் , நிலக்கரி

31. எம் நாட்டில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவது,
    1. வெளிவிவகார அமைச்சு
    2. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு
    3. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

32. இலங்கையிலுள்ள முதன்மையான சர்வதேச விமான நிலையம்,
    1. பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம்
    2. இரத்மலான விமான நிலையம்
    3. மஹிந்த ராஜபக்ச சர்வதேச விமான நிலையம்

33. இப்படத்தில் காட்டப்பட்டுள்ளவாறு யோகட் கோப்பைகளை துளையிடுவதன் காரணம் என்ன??




    1. நீரை சுத்திகரிப்பதற்காக
    2. நீரை வடிகட்டுவதற்காக
    3. பஞ்சை இடுவதற்காக

34. இப்பரிசேதனையின் போது கரண்டிக்கு மேல் தகர மூடியொன்றை பிடித்தால் யாது நடைபெறும்?



    1. நீர்துளிகளை காண முடியும்
    2. நீர்துளிகளை காண முடியாது
    3. நீர் பனிக்கட்டியாக மாறியிருக்கும்.

35. அதிகளவில் தண்டுக்கோதியின் தாக்கத்திற்கு உள்ளாகும் பயிர்,
    1. வாழை 2. கொய்யா 3. நெல்

36. எமது நாட்டிலும் அந்நியர் ஆட்சிக் காலத்தில் சுதேசிகளுக்கு பழக்கப்படுத்திய தவறான செயற்பாடு அல்லாதது,
    1. மதுபானம் அருந்துதல்
    2. போதைப்பொருட்பாவனை
    3. போதைப்பொருட்பாவனை

37. பாதணிகள் அணியாது நடந்து செல்லும் போது காலில் வலியைத் தோற்றுவிக்கும் இடம்,
    1.மணற்பாங்கான தரை 2.புற்கள் கொண்ட தரை 3. பரல் கொண்ட தரை

38. இலங்கையிலுள்ள மிகப்பெரிய துறைமுகம்,
    1. காலித்துறைமுகம்
    2. அம்பாந்தோட்டை துறைமுகம்
    3. கொழும்பு துறைமுகம்

39. இரவு , பகல் மாற்றம் பெறுவதற்கு காரணமாக அமைவது,

1. சூரியன் தன்னைத்தானே சுற்றுதல்.

2. கோள்கள் நீள்வட்டப் பாதையில் பயணித்தல்

3. பூமி தன்னைத்தானே சுற்றுதல்.

40. மருந்துப் பொருட்களைப் பயன்படுத்தும் போது கவனத்தில் கொள்ளத் தேவையற்றது,

1. ஊட்டு அளவு  2. அதன் விலை  3.உட்கொள்ள வேண்டிய தடவைகள்

41. நாய், கிளி, மீன், கூட்டுப்புழு

மேழுள்ள பிராணிகளில் கால் இல்லாத, வாழ்க்கை வட்டம் கொண்ட பிராணி எது?

1. கிளி  2. மீன்  3. கூட்டுப்புழு

42.வண்ணாத்திப்பூச்சியின் வாழ்க்கைவட்ட படிமுறைகளை சரியாக காட்டும் விடைத் தொகுதி எது?

| | |
|---|---|
| A – கூட்டுப்புழு பருவம் | B –குடம்பிப்பருவம் |
| C – முட்டை மயிர்க்கொட்டி | D – வண்ணாத்திப்பூச்சி |

1. C , B , A , D  2. B , C , A , D 3. D, C, B , A

43. பதுளை மாவட்டத்தில் ஏற்படக்கூடிய இயற்கை அனர்த்தம் அல்லாதது பின்வருவனவற்றுள் எது?

1. மண்சரிவு  2. வெள்ளப்பெருக்கு  3. சுனாமி

44. எமது நாட்டில் காணப்படும் மிக உயர்ந்த மலை பின்வருவனவற்றுள் எது?

1. பீதுருதாலகால  2. சிவனொலி பாத மலை  3. நக்கிள்ஸ்

45. இலங்கை அமைந்துள்ள கண்டம் , சமுத்திரம் முறையே காட்டும் விடை,

1. ஆசியா , இந்து  2. ஆசியா , பசுபிக்  3. ஐரோப்பா , ஆசியா

46. எம் நாட்டில் இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடி உதவிகளை வழங்குவது,

1. வெளிவிவகார அமைச்சு

2. பொருளாதார அபிவிருத்தி அமைச்சு

3. அனர்த்த முகாமைத்துவ அமைச்சு

47. எமது நாட்டிலுள்ள ஆறுகள் பெரும்பாலும் உற்பத்தியாகும் இடம்,

1. மலை நாட்டுப் பகுதி  2. கரையோரப் பகுதி  3. தாழ்நிலப்பகுதி

48. தொழினுட்ப விருத்தி ஏற்படாத காலத்தில் உணவை நீண்ட காலம் பயன்படுத்துவதற்காக மேற்கொள்ளப்பட்ட முறை அல்லாதது,

1. தேனில் இட்டு வைத்தல்.  2. புகையூட்டல்  3. குளிரூட்டியில் வைத்தல்

49. வாகனச் சாரதிகளின் பின்வரும் எந்தச்செயற்பாடு மூலம் விபத்துக்கள் ஏற்படுவதனை குறைக்க முடியும்,

1. மது போதையில் வாகனம் செலுத்துதல்

2. தொலைபேசியில் உரையாடியவாறு வாகனம் செலுத்துதல்.

3. வீதிச் சட்டத்திட்டங்களை முறையாகப் பின்பற்றல்.

50. சேனைப் பயிர்ச் செய்யும் இடங்களில் பயிரிடப்படும் பயிர்த்தொகுதி,

1.குரக்கன், சோளம், இறுங்கு  2.திணை,வாழை,பாசிப்பயறு  3.காராமணிப்பயறு,எள்ளு, உழுந்து

51. இலங்கைக்குக் கிழக்கே காணப்படும் நாடுகளின் கூட்டம்,

1. மலேசியா, தாய்லாந்து  2. ஆபிரிக்கா, அவுஸ்திரேலியா  3. இந்தியா, சீனா

52. மூன்று மாதங்களுக்கு மேற்படாத காலத்தினுள் விளைச்சல் தரக்கூடிய பயிர்வகைகளின் கூட்டமாக அமைவது,

1.அவரை, பயற்றை, வெண்டி 2. பாகல், புடோல் , மாதுளை 3. திராட்சை, பீர்க்கு, தக்காளி

53. 1890 ஆண்டு கண்டி தரமராஜ வித்தியாலயத்தில் சேவை புரிந்து தேசிய வீரர் பட்டியலில் உள்ளவர்,

1. D.P ஜயா

2. ஆனந்த குமாரசுவாமி

3. C.W.W கன்னங்கரா

54. இலங்கையின் நீளமான ஆறும் அது கடலுடன் கலக்கும் இடமும்,

1.களனி கங்கை, கொழும்பு

2.மகாவலி கங்கை, திருகோணமலை

3.களுகங்கை, களுத்துறை

55. அதிகளவில் காபோவைதரேற்று அடங்கிய உணவு வகை ,

1. கடல்மீன் 2. பலாக்காய் 3. பால்

56. பழுதடைந்த உணவில் காணமுடியாதது,

1. பழுதடைந்த உணவில் காணமுடியாதது,

2. ஒட்டும் தன்மைக் காணப்படல்.


3. நல்ல மனம் வீசுதல்.

57. கீழுள்ள குடுவைகளில் வித்துக்கள் இடப்பட்டுள்ளன. இப்பரிசோதனை வித்து முளைப்பதற்கு எது அவசியம் என பரீட்சிப்பதற்காக

1. வெளிச்சம்

2. ஈரப்பதன்

3. வளி




58. மேலுள்ள பரிசேதனையின் போது வித்து முளைத்த குடவை எது?

1. A 2. B 3. C

59. ‘எனது எதிர்கால எதிர்பார்ப்புக்கள்’ எனம் தலைப்பில் மூன்று வாக்கியங்கள் எழுதுக.(ஒவ்வொரு வாக்கியமும் 5 சொற்களுக்கு குறையாது இருத்தல் வேண்டும். எழுவாய் பயனிலைத் தொடர்ப்பும் எமுத்துக்கூட்டலும் சரியாக இருத்தல் வேண்டும்.)

1. ..................................................................................................................................

..................................................................................................................................

2. ..................................................................................................................................

..................................................................................................................................

3. ..................................................................................................................................

..................................................................................................................................